விலை சதம். 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 வைகாசி 24 ஷஃபான் 3 இதழ் 112.
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6-6-1981

## யாழ்: முடிவுகள் வெளியாகவில்லை

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

இம்மாவட்ட தேர்தல் முடிவுகள் சில சட்டப்பிரச்னைகள் காரணமாக வெளியிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் இது குறித்து தேர்தல் ஆணையாளரே இறுதி முடிவெடுப்பார் என்றும் யாழ், அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்துள்ளார்.

### அபிவிருத்திச்சபைத் தேர்தல் முடிவுகள்:

# ஐ. தே. க. பெருவெற்றி!

# 5 இடங்களில் கூட்டணி

## ம.வி.முன்னணி 9 பேர்தெரிவு!

(கொழும்பு)
மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி 5மாவட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. மாத்தளை மாவட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி நான்கு மாவட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது.

24 மாவட்டசபைகளின் 7 சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டது தெரிந்ததே.

**11 சபைகளில் யூ. என். பி.**

தேர்தல் நடைபெற்ற 17 மாவட்டங்களில் 11 மாவட்ட சபைகளை ஐக்கியதேசியக்கட்சியும், 5 சபைகளை கூட்டணியும் கைப்பற்றியுள்ளன.

**கூட்டணிக்கு 5 சபைகள்**

மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட சபைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

**சரிசமம்**

மன்னார் மாவட்டத்திலுள்ள 4 இடங்களில் 2 கூட்டணியும் 2 யூ. என். பியும் வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் 4 இடங்களில் 2 கூட்டணியும் 2 யூ. என். பியும் வெற்றி பெற்றுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 இடங்களில் 2 கூட்டணியும், 2 யூ. என். பியும் வெற்றிபெற்றுள்ளன.

**அம்பாறை**

அம்பாறை மாவட்டத்தின் 4 இடங்களில் 3 யூ. என். பியும், 1 கூட்டணியும் வெற்றிபெற்றுள்ளன. இச்சபையில் யூ. என். பி. சார்பில் ஒரு தமிழர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டசபையில் யூ. என். பியில் போட்டியிட்ட 2 தமிழர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பதுளை மாவட்டசபையிலும் யூ. என். பியில் போட்டியிட்ட ஒரு தமிழர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### கொழும்பு மாவட்டம் (16) உறுப்பினர்

| | |
|---|---|
| பதிவான வாக்குகள்: | 3,57,702 |
| ஐ தே. கட்சி | 2,66,424 |
| மக்கள் விடுதலை முன்னணி [சுயேச்சைக்குழு] | 78,912 |
| அ. இ. தமிழ்க் காங்கிரஸ் | 12,386 |

ஐ. தே. க. உறுப்பினர்கள்: பி. அல்மன் பீரிஸ் [தலைவர்] எம். டி. கிச்சிலான், எம். எஸ். செல்லச்சாமி, ஆர். பி. எம். செனிவரத்ன, ஜெய பெரேரா, எம், குணசேகரா, குணரத்ன தனுவேல்' ஏ. பி. நஸிர், எம். என். வேதநாயகம், வணிகசூரியா, காமினி பெரேரா.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்; உபதிஸ்ஸ கமநாயகா, ஜே. பத்திரான, பெர்ணண்டோ, சமரசேகரா.

### மாத்தளை மாவட்டம் [3]

| | |
|---|---|
| பதிவான வாக்குகள்: | 99,295 |
| ஐ தே. க. | 70,773 |
| சுயேச்சைக்குழு[1] | 11,870 |
| சுதந்திரக்கட்சி | 9,951 |
| சுயேச்சைக்குழு [2] | 6,701 |

3 இடங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றியது.

### பதுளை மாவட்டம் (8)

| | |
|---|---|
| பதிவான வாக்குகள் | 1,53,704 |
| ஐ. தே. க. | 1,23,166 |
| சுயேட்சைக்குழு | [1, 30 538] |

இம்மாவட்டத்தில் 6 இடங்களில் ஐ. தே. க. வும் 2 இடங்களில் சுயேச்சையும் வெற்றி பெற்றன.

### களுத்துறை (8)

| | |
|---|---|
| ஐ, தே, க. | 6 |
| சுயேச்சை | 2 |

### காலி (9)

| | |
|---|---|
| ஐ. தே. க. | 7 |
| சுயேச்சை | 2 |

[4ம் பக்கம் பார்க்க]

## வழமைபோல் பாடசாலைகள் நடைபெறும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

[கொழும்பு]
வடபகுதியிலுள்ள சகல அரசாங்கப் பாடசாலைகளும் வழமைபோல் நடைபெறுமென்று கல்வியமைச்சு அறிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளை மூடுவது சம்பந்தமாகக் கல்வியமைச்சிலிருந்து எந்தப் பணிப்புரையும் வரவில்லையென்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## தணிக்கை

நாடு முழுவதும் அவசரகால நிலைமை அமுலில் இருப்பதால் செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன.

## கிழக்கில் ஐ. தே. கட்சிக்கு கூடுதல் வாக்கு

[கொழும்பு]
கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன.

ஐக்கியதேசியக்கட்சிக்கு 1,68,299 வாக்குகளும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 1,56,869 வாக்குகளும் கிடைத்துள்ளன.

## வருந்துகின்றோம்

தவிர்க்க முடியாத சூழ்நிலைமைகளின் காரணமாக கடந்த சில தினங்களாக 'ஈழநாடு' வெளிவரமுடியாது போய்விட்டது. இதனால் சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக வருந்துகிறோம்.

மறு அறிவித்தல்வரை விளம்பரங்கள்; அறிவித்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறிவித்துக் கொள்கின்றோம்.

'நிர்வாகி'

### சர்வதேசநாடுகள்

# நமீபிய விடுதலைப்போருக்கு உதவ தருணம்வந்துள்ளது

## இந்திய ஜனாதிபதி கூறுகிறார்

லுசாக்கா, ஜூன். 4 நமீபியா விடுதலைப்போராட்டத்திற்கு சர்வதேச நாடுகள் உதவ முன்வரவேண்டும்'

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலம சஞ்சீவரெட்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸாம்பியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவரும் திரு. சஞ்சீவரெட்டி இந்திய சமூகத்தவர் மத்தியில் உரைநிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

நமீபியவிடுதலைப்போராட்ட வீரர்களுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டிய தருணம்வந்து விட்டது. இதனை சகல நாடுகளும் உணர்ந்து உதவமுன்வர வேண்டுமென்றும் திரு. ரெட்டி கூறினார்.

ஆபிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு இந்தியா என்றுமே ஆதரவளித்து வந்துள்ளதென்பதையும் ஸிம்பாப்வே சுதந்திரமடைந்தபோது இந்தியா மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும் திரு. ரெட்டி சுட்டிக்காட்டினார். [இ]

### அம்பர்

[மன்னார்]

மன்னார் மாவட்டக் கடலோரத்தில் அம்பர் ஒதுங்கிவருகின்றது. இதன் காரணமாகக் கடலோரங்களில் ஏராளமான மக்கள் அம்பர் எடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சிலருக்குப் பெறுமதிவாய்ந்த அம்பர் கிடைத்துள்ளது.

### விளையாட்டுக் கழகங்கள்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களை விளையாட்டுத்துறை அமைச்சுடன் பதிவுசெய்துகொள்ளுமாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் கேட்டுள்ளார்.

அடுத்தமாதம் 25ம் திகதி வரை பதிவுசெய்து கொள்ளலாமென அவர் அறிவித்துள்ளார்.

### பேசாலைக்கு மின்சாரம்

[மன்னார்]

பேசாலைப் பகுதிக்கான மின்சார விநியோகம் ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் ஆரம்பித்துவைக்கப்படும்.

### ஜூலை 20ல் மா. அபி. சபைக் கூட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள 24 மாவட்டங்களில் அமைக்கப்பட இருக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் முதலாவது கூட்டத்தை அடுத்த மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை காலை 10-45 மணிக்கு நடாத்துவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாவட்ட அமைச்சர்கள் தலைமையிலேயே இக்கூட்டங்கள் நடைபெறும்,

# பாப்பரசர்

## வத்திக்கான் திரும்பினார்

வத்திக்கான் நகர், ஜூன் 4. பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இன்று வத்திக்கான் நகர் திரும்பினார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பரிசுத்த பாப்பரசர் பூரண சுகமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பாப்பரசர் நேற்று வைத்தியசாலையிலிருந்து நடந்து சென்று காரில் ஏறிக்கொண்டார்.

# யாழ். நிலைமை: ஜனாதிபதி 'அமிர்' பேச்சு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தின் இன்றைய நிலைசுறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தையின் போது திரு. அமிர்தலிங்கத்துடன் டாக்டர் நீலன்திருச்செல்வமும் உடன் இருந்தார்.

யாழ். மாவட்ட நிலைமை குறித்து திரு. அமிர்தலிங்கம் ஏற்கனவே திரு. ஜெயவர்த்தனவுக்கு கடிதம் எழுதியிருந்தார். [இ]

# ரயிலுக்கு இளைஞர் பலி!

(சாவகச்சேரி)

தேர்தல் கூட்டம் பார்த்த பின் இயற்கைக் கடன் கழிப்பதற்காகப் பளைப் புகையிரத நிலைய அருகிற் சென்று திரும்புகையில் இளைஞர் ஒருவர் புகையிரதத்தால் மோதுண்டு மரணமானார். சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானார். புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தை சேர்ந்த நாகநாதி கிருஷ்ணர் (வயது29) என்பவரின் மரணவிசாரணையை சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் நடத்தினார்.

மரணமடைந்தவரின் தந்தை கங்கரன் நாகநாதி, மனைவி புஷ்பரிஞ்சலி கிருஷ்ணர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

டாக்டர் திரு. கே. சண்முகநாதன் தமது பிரேத பரிசோதனை அறிக்கையில் மூளை இரத்தநரம்பு வெடித்ததினால் ஏற்பட்ட மரணம் என தெரிவித்ததை அடுத்து மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (இ)

## சீனாவுக்கு உலக வங்கி கூடுதல் கடன் உதவி

வாஷிங்டன் ஜூன்4 சீனாவுக்கு உலகவங்கி கூடுதல் கடன்வாங்க முடிவு செய்துள்ளது.

இதன் எதிரொலியாக் இந்தியாவுக்கு அடுத்த ஆண்டில் உலகவங்கி வாங்கும் கடன் தொகை மிகவும் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவுக்கு உலகவங்கியுடன் சர்வதேச அபிவிருத்தி வங்கியும் கடன் வழங்க தீர்மானித்துள்ளது.

## மத்திய வங்கியின் புதிய கடன் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது

[கொழும்பு]

வர்த்தகவங்கிகள் கடன் வழங்குவதின் மீது மத்திய வங்கி விதித்திருந்த கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது. அதே சமயம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய கடன் கட்டுப்பாட்டு முறையொன்றை மத்தியவங்கி அமுலுக்கு கொண்டுவந்துள்ளது.

வர்த்தகவங்கிகள் கடன் வழங்குவதன்மீது மே மாதம் 11ம் திகதி மத்தியவங்கி கட்டுப்பாடு ஒன்றை விதித்தது. அந்தக் கட்டுப்பாட்டை இப்பொழுது மத்தியவங்கி நீக்கி விட்டது.

வர்த்தகவங்கிகளுக்கு மத்தியவங்கி வழங்கவந்த பொதுவான கடன்வசதிகளை வெகுவாக வெட்டிகுறைத்துள்ளது. வர்த்தக வங்கிகளுக்கான கொடுப்பனவுகளை 46 கோடியிலிருந்து 10 கோடியே 80 லட்சம்ரூபாவாகக் குறைந்துள்ளது.

## பங்குக் குரவர் தாயகம் திரும்பினார்

[மன்னார்]

மன்னார் - தாழ்வுபாடு கிராமத்தின் புனித சூசையப்பர் ஆலய பங்குக்குரவர் வணபிதா அன்ரூ சேப்கா தனது தாயகமான போலந்திற்குப் பயணமானார்.

தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தின்பங்குக்குரவராகக் கடமையாற்றிய வணபிதா அன்ரூ சேப்கா அடிகளாருக்கு அண்மையில் தாழ்வுபாடு பங்கு மக்களால் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது. அதனுடன் இப்பங்குக் குரவரின் குருத்துவப்பட்டம் பெற்ற 50வது ஆண்டுப் பொன்விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வணபிதா. அன்ரூ சேப்கா அடிகள் 1920ம் ஆண்டு சகோதரராக இலங்கைக்கு விஜயம் செய்து யாழ் ஆயரால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அதன் பின்னர் புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தின் பொறுப்பாளராகப் பதவி வகித்ததுடன் பருத்தித்துறை, முல்லைத்தீவு, தலைமன்னார், பள்ளிமுனை ஆகிய இடங்களில் பங்குக் குரவராகச் சேவை புரிந்தார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல்

# வாக்களிப்பு அமைதியாக நாடெங்கும் நடைபெற்றது

## வாக்களிப்பதில் மக்கள் ஆர்வம் காட்டினார்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திச் சபைக்கான தேர்தல் நேற்று முன தினம் அமைதியாக நடைபெற்றது. வாக்காளர்கள் அமைதியாகச் சென்று வாக்களித்தனர். காலை முதல் பிற்பகல் 4 மணி வரை வாக்காளர்கள் வாக்களிப்புநிலையங்களுக்குச் செல்வதைக் காணக்கூடியதாயிருந்தது. வாக்களிப்பதில் மக்கள் ஆர்வம் காட்டினார்கள்.

ஆண்கள் புறம்பாகவும், பெண்கள் புறம்பாகவும் வரிசையில் நின்று வாக்களித்தனர். சில வாக்களிப்புநிலையங்களில் காலையில் வாக்காளர் தொகை குறைவாகக் காணப்பட்டது. ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் பணியாற்றினர். இராணுவத்தினரும், பொலிசாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபைக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான ஐக்கியதேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஆகியவையும், சோஷலிசமுன்னணி, சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணியும் சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிட்டன.

நாட்டிலுள்ள 24 மாவட்ட சபைகளில் 7 சபைகளில் ஐக்கியதேசியக்கட்சி ஏற்கனவே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மற்றும் 17 மாவட்ட சபைகளில் ஐக்கிய தேசியக்கட்சிபோட்டியிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டத்திலும் போட்டியிட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்ததும் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன, இறுதி முடிவுகள் எடுப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களில் எடுக்கப்பட்ட கணக்கு விபரங்கள், யாழ். அரசாங்க செயலகத்திற்கு கொண்டுவரப்பட்டன. நேற்று இரவு 10 மணிவரை எந்த மாவட்டசபை முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை, இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை, யாழ். அரசாங்க செயலகத்தில் இறுதிக் கணக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்க செயலகத்திற்கு வெளியில் பொதுமக்கள் குறைவாகவே காணப்பட்டனர், (க)

## நயினை உற்சவம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நயினை நாகபூஷணி அம்பாள் வருடாந்த உற்சவம் யாழ். மாவட்டத்தில் அவசரகாலசட்டம் அமுலுக்கு வந்துள்ளதை அடுத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 3ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து வழக்கம்போல் நடைபெறுமென்று ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். [இ]

## என்.எம்.பெரேரா நினைவு முத்திரை

[கொழும்பு]

கலாநிதி என். எம் பெரேராவின் நினைவு முத்திரை இன்று 6ந் திகதி வெளியிடப்படவுள்ளது. அமரர் என். எம். பெரேராவின் பிறந்த தினம் இம்மாதம் 6ந் திகதி வருவதால் அன்றைய தினமே அவரின் நினைவு முத்திரை வெளியிடப்படுகிறது.

## பரிசோதனைக் குழாய் குழந்தைகள்

கேம்பிரிட்ஜ், ஜூன் 5

குழாயில் கருத்தரித்த குழந்தைகள் 12 பெண்களின் கர்ப்பத்தில் வளர்ந்துவருகின்றன

## நாடு முழுவதும் அவசரகாலம்

[கொழும்பு]

நாடு முழுவதும் நேற்று முன் தினம் மாலை 5 மணிமுதல் அவசரகாலச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே அவசரநிலைமை இருந்துவருவது தெரிந்ததே.

## அமிர் விடுதலை

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த புதன்று பாதுகாப்பின் நிமித்தம் காவல் படையினரால் காவலில் வைக்கப்பட்டபோதிலும் ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜயவர்த்தனவின் பணிப்பின் பேரில் உடனடியாக விடுதலை செய்யப்பட்டதாக அரசாங்க அறிவித்தல் ஒன்றுகூறுகிறது.

கொழும்பு துறைமுகத்திலிருந்து

# பனமாக்கப்பல் வெளியேறத்தடை

[கொழும்பு]

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள பனமா கப்பல் ஒன்றை தடுத்து வைக்கும்படி கொழும்புத் துறைமுக பிரதம சுங்க சேகரிப்பாளருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பனமாவைச் சேர்ந்த "மோட்டார் வெசல் கலிபோர்னியா" என்ற கப்பலையே தடுத்து வைக்கும்படி கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த செவ்வாய் உத்தரவிட்டது.

இலங்கையரான கப்பல் ஊழியர் ஒருவரை வேலையிலிருந்து கப்பல் காப்டன் இடைநிறுத்தம் செய்தமைக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தொடர்ந்து மேல்நீதிமன்ற நீதிபதி திரு. சிவாசெல்லையா முன்னிலையில் செவ்வாயன்று இம்மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, கப்பலைத் தடுத்துவைக்கும்படி பிரதம சுங்கசேகரிப்பாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# அ. சபை உறுப்பினர்கள் 15-ல் கொழும்பில் கூடுவர்

## ஜனாதிபதி கூட்டும் கருத்தரங்கு

[கொழும்பு]

நாடு முழுவதிலும் உள்ள 24 மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் இம்மாதம் 15-ம் திகதி கொழும்பில் கூடுவர்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் மாவட்ட சபை உறுப்பினர்களுக்கான புதிய அதிகாரங்கள், செயற்பாடுகள், கடமைகள பற்றி விளக்கமளிக்கப்படும்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆரம்பித்து வைப்பார்.

பிரதம மந்திரி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் உறுப்பினர்களுடன் சகல எம். பிக்களும் மாநகர சபைத் தலைவர்களும் பங்குபற்றுவர்.

மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்குப்பொறுப்பான அமைச்சரான பிரதமமந்திரி உட்பட அபிவிருத்திப்பணிகளுக்குப் பொறுப்பான 12 அமைச்சர்கள் இக்கருத்தரங்கில் விளக்க உரை நிகழ்த்துவர். [இ]

## இளவரசர், டயானா கொலைப் பயமுறுத்தல்

### அமெரிக்கர் கைது!

லண்டன், ஜூன் 4

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்சையும் டயானா சீமாட்டியையும் கொலை செய்வதாக பயமுறுத்திய அமெரிக்கர் கைது செய்யப்பட்டு லண்டன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

ரொனல்ட்சென் என்ற இந்த அமெரிக்கர் மீது பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியாருக்கு பயமுறுத்தல்களை அனுப்பி வைத்ததாகவும், லண்டன் வங்கிகளை அழிக்கப்போவதாகவும் பயமுறுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்நபரை விசாரணைக்காக ஒரு வாரத்திற்கு றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இவர் நியூயோர்க்கைச் சேர்ந்தவரென்றும், தற்போது லண்டனில் வசித்து வருவதாகவும் விசாரணையின் போது தெரியவந்தது.

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும், டயானா சீமாட்டியும் சென். போல்ஸ் தேவாலயத்தில் ஜூலை 29-ந் திகதி பொலிஸ் பாதுகாப்புடன் தமது திருமணத்தை நடத்தவுள்ளதாக தெரியவருகிறது.

## பிரி. குடியுரிமை மசோதாவுக்கு அங்கீகாரம்

லண்டன், ஜூன் 5

சர்ச்சைக்குரிய பிரிட்டிஷ் குடியுரிமை மசோதா பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நிறைவேறியது.

இந்த மசோதாவுக்கு ஆதரவாக 287 வாக்குகளும் எதிராக 234 வாக்குகளும் கிடைத்தன. [இ]

# வைத்திய, பொறியியல் இறுதிப்பரீட்சையில் சித்தி

[கொழும்பு]

கடந்த ஏப்ரலில் கொழும்பு பல்கலைக்கழகம் நடத்திய வைத்திய பட்ட இறுதிப்பரீட்சையில் 66 மாணவர்களும் [சிறப்பு] வைத்தியப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மாணவர்களின் விபரம் வருமாறு:

செல்வி எம். சி. காசிநாதர், செல்வி எஸ். இராமச்சந்திரா, கே. ஜெயபாலன், ஏ. கனகசுந்தரம், ரி. நாகேந்திரா, ஆர். ரங்கநாதன், செல்வி ஐ. சிவக்கொழுந்து, ஏ. சிவகுமார், செல்வி பி. ஏ. அந்தோனிப்பிள்ளை, எஸ். சந்திரகாந்தன், ஜே. ஜயமோகன், வி. கமலநாதன், செல்வி டி. கணபதிப்பிள்ளை, என். நவநீதராஜா. என். நவரத்தினராஜா, செல்வி எஸ். எஸ். நீலகாந்தன் செல்வி என். பரமநாதன் செல்வி கே. பொன்னையா, செல்வி என். ராஜகுலசிங்கம், என். ரவீந்திரன், செல்வி எஸ். சண்முகம்பிள்ளை, டபிள்யூ எஸ் காந்தராஜ்.

பி. எஸ். சி. பொறியல் (சிறப்பு) பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மாணவர்களின் விபரம்:

எம். யோகேந்திரகுமார், வி. சூரியமலர், ஆர். ஜெயராம். பி' ப்ாலேந்திரன், ஆர். மதனகுமார், எஸ். நரேந்திரன், எம். ராமதாசன், ஏ. ரமேஷ், எஸ். ரவிகுமார், கே. சிவஞானசூரியர், எம், சிவகுமாரன், .செல்வி எஸ். சிவபாதசுந்தரம், கே. எஸ். சிவபாதம் எஸ். மனோகரன், எஸ். விக்னேஸ்வரன், எஸ். வித்தகபண்டிதன், எஸ். விஜயகுமார். எஸ், ஆறுமுகசாமி, எஸ். கனகலிங்கம், செல்வி டி. ஜி. லலிதா, எஸ். பத்மநாதன், கே ரகுநாதன், ரி, சிவகுமாரன், கே. ஸ்ரீதரன். ஏ. வசந்தகுமார், எஸ். அன்டன் ராஜசெல்வன், எஸ். ஜெகதீஸ்வரன், செல்வி என். கந்தையா, கே. ஜெகதீஸ்வரன், எம். மதனராஜா, ரி. பாஸ்கரன், எஸ். சர்வலோகநாதன், எஸ். செல்வரத்தினம், ரி தனபாலரத்தினம், எஸ். ஜேசுராஜா.

# கூட்டணி கைப்பற்றிய மாவட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை கூட்டணி கைப்பற்றியுள்ளது.

**வவுனியா 4**

| | |
|---|---|
| கூட்டணி | 18,048 |
| ஐ. தே. க. | 10,976 |
| த. காங்கிரஸ் | 268 |

கூட்டணியைச் சேர்ந்த மு. சிற்றம்பலம் [தலைவர்], வை. சிற்றம்பலம் ஆகியோரும், ஐ. தே. க. வைச் சேர்ந்த வி பராராஜசிங்கம், ரி. பரமானந்தம் ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர்.

**மட்டக்களப்பு 3**

| | |
|---|---|
| கூட்டணி | 74,302 |
| ஐ. தே. க. | 34,664 |
| சுயேச்சை | 16,098 |

கூட்டணியைச் சேர்ந்த சி. சம்பந்தமூர்த்தி [தலைவர்], க. சிவரத்தினம், ஐ.தே.க.வைச் சேர்ந்த க. மாணிக்கப்போடியாரும் வெற்றி பெற்றுள்ளனர்.

**முல்லைத்தீவு [4]**

| | |
|---|---|
| கூட்டணி- | 13,815 |
| ஐ.தே.க.- | 8, 451 |
| த. காங்கிரஸ்- | 650 |

கூட்டணியைச் சேர்ந்த ஞா. செபமாலை மரியநாயகம் [தலைவர்], கா. தம்பாப்பிள்ளை ஆகியோரும் ஐ. தே. கவைச் சேர்ந்த எஸ். செபமணி, ரி. தியாகராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**மன்னார் [4]**

| | |
|---|---|
| கூட்டணி- | 16,459 |
| ஐ. தே. க.- | 14,713 |
| த. காங்கிரஸ்- | 1,511 |

கூட்டணியைச் சேர்ந்த மரிசால் செபமாலை [தலைவர்[, வேலாயுதபிள்ளை கைலாசபிள்ளை ஐ. தே க.வைச் சேர்ந்த காயல் செல்டானோ, சாகுல் ஹமீத் ஆகியோரும் வெற்றிபெற்றனர்,

**திருகோணமலை [2]**

| | |
|---|---|
| கூட்டணி- | 44, 692 |
| ஐ. தே. க. | 42,388 |

கூட்டணியைச் சேர்ந்த ஆ. தங்கத்துரை [தலைவர்] ஐ. தே. கவைச் சேர்ந்த எம். எச். ஏ. ரஹீம் ஆகியோர் வெற்றிபெற்றனர், [இ]

# 340 ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியரானர்கள்

[கொழும்பு]

சுமார் 340 தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் ஜூன் முதலாம் திகதி முதல் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பட்டதாரிகளின் வெற்றிடங்களுக்கு இவ் ஆசிரியர்கள் பதவிஉயர்த்தப்பட்டுள்ளனர்,

இவ் ஆசிரியர்கள் கல்விப்பட்டத்துடன் கல்விச் சேவையில் நான்கு ஐந்து வருடங்களாகக் கடமையாற்றி வந்தனர். இவர்கள் தற்போது பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக கல்விஅமைச்சு அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இவர்கள் முன்பு 230 ரூபா அடிப்படைச்சம்பளத்தில் நியமிக்கப்பட்டனர். தற்போது இவர்கள் 5880 ரூபா வருடாந்த சம்பளத்தில் நியமனம் பெற்றுள்ளனர்.

## ஐ. தே. க..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

**கம்பளை (12)**

| | |
|---|---|
| ஐ. தே. க. | 9 |
| சுயேச்சை | 3 |

**புத்தளம் (4)**

| | |
|---|---|
| ஐ. தே. க. | 2 |
| சுயேச்சை | 2 |

**அம்பாந்தோட்டை (3)**

| | |
|---|---|
| ஐ. தே. க. | 2 |
| சுயேச்சை | 1 |

**அனுராதபுரம் (6)**

| | |
|---|---|
| ஐ. தே. க. | 5 |
| சுயேச்சை | 1 |

**பொலனறுவ (2)**

ஐ. தே. க.

பொலநறுவை மாவட்டத்தில் ஐ. தே. கட்சியுடன் போட்டியிட்ட சுதந்திரக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற கோஷ்டியினர் தோல்வியடைந்தனர். [க]

# கையிருப்பில் போதிய உணவுப் பொருளுண்டாம்

[கொழும்பு]

யாழ், உணவுத் திணைக்களக் களஞ்சியத்தில் போதியளவு உணவுப் பொருட்கள் கையிருப்பிலுள்ளதாக உணவு அமைச்சின் செயலாளர் திரு. எம், டி, டி. பீரிஸ் தெரிவித்தார்,

இக்களஞ்சியத்தில் ஆறு மாதங்களுக்குத் தேவையான சீனி, மா, அரிசி ஆகிய உணவுப் பொருட்கள் போதியளவில் கையிருப்பிலுள்ளதாகவும், இதனால் வடபகுதிக்கு உணவு அனுப்ப வேண்டிய தேவை தற்போதில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் வரட்சி! மக்கள் குடிபெயர்வு

## கால்நடைகள் மடிகின்றன

[கிளிநொச்சி]

கிளிநொச்சித் தொகுதியில் வாழுகின்ற குடும்பங்கள் பல குடிநீரின்றி இடம்பெயரத் தொடங்கியுள்ளன.

கடந்தமாரிகாலத்தின்போது போதிய மழைபெய்யாததினால் கிளிநொச்சித்தொகுதியிலுள்ள பல குளங்களில் நீர் வற்றியுள்ளது.

பூநகரி, தட்டுவன்கொட்டு, ஏமபுரம், உருத்திரபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் குடிநீருக்குக் கூட வழியில்லாது தமது வீடுகளை விட்டுக், குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

கால்நடைகளும் குடிநீருக்கு வழியின்றிச் செத்து மடிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் கிளிநொச்சி டிப்போவிலுள்ள கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் அங்கு வேலைகள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றன.

கிளிநொச்சி டிப்போவில் தங்கியிருந்து வேலை செய்யும் ஊழியர்களுக்கு வேண்டிய குடிநீரை டிப்போ அத்தியட்சகர் திரு. சொக்கலிங்கம் பல மைல்களுக்கு அப்பாலிருந்து பெற்றுக்கொடுப்பதால் ஊழியர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி மட்டும் பூர்த்தி செய்யக்கூடியதாகஇருக்கிறது. ஏனைய தேவைகளுக்கு வேண்டிய நீரின்றி ஊழியர்கள் கஷ்டப்பட்டு வருகிறார்களாம்.

# மட்டக்களப்பு பல்கலைக்கழகக்கல்லூரி ஆகஸ்ட் முதல் செயல்படும்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பல்கலைக்கழகம் எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் முதலாம் திகதி செயல்படவுள்ளது. இதனால் எமதுமக்களின் 25 வருட அபிலாஷையும் எண்ணமும் நிறைவு பெறுகின்றது.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை பட்டிருப்புத் தொகுதி செட்டிபாளையம் உபதபால் அலுவலகத்தைதிறந்துவைத்து உரையாற்றிய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:.

மட்டக்களப்பு மாவட்டமக்களின் நீண்டகால கோரிக்கைகள் இன்றைய அரசாங்கத்தின் காலத்தில்பூர்த்திசெய்யப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் நடைபெறாத அபிவிருத்திவேலைகள் இன்றைய அரசாங்கத்தின் காலத்தில் தற்போதுநடைபெற்றுவருகின்றன; நடைபெறவும் உள்ளது.

கிழக்கு மாகாணத்திற்கு ஒரு வளாகம் தேவையென்று நீண்டகாலமாக குரலெழுப்பி வந்தோம். அதன் பிரகாரம் திருகோணமலையில் அதற்கான காணியும் தெரிவுசெய்யப்பட்டது. ஆனால் அது வேறு இடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

ஆனல் இன்று நிறைவு பெறவுள்ளது.

மற்றும் உள்நாட்டு அலுவல்கள் மந்திரி திரு. கே டபிள்யு தேவநாயகம் உட்பட பலர் உரையாற்றினர். [இ]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 303 இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under No. QB 100236/81, P. O. Box 49, Jaffna.